**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2025-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06-ம் நாள் வியாழக்கிழமை

**<u>O.S. No.169/2024</u>**

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW.1 வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A. LL.B., (HONS) மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயகுமார் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | ராமசாமி | கிராமம் | : | கோனாச்சேரி |
| | | | தொழில் | : | ஓய்வு |
| | | | வயது | : | 62 |

**<u>குறுக்கு விசாரணை</u>**

1ம் பிரதிவாதி எனது தகப்பனார் என்றால் சரிதான். சுந்தரம்மாள் எனது தாயார் என்றால் சரிதான். குஞ்சியாம் பிள்ளை எனது பாட்டனார் என்றால் சரிதான். எனது பாட்டனார் குஞ்சியாம் பிள்ளை தாவா சொத்துகள் சம்மந்தமான பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு எண்.90/1986 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.311/1993 எனது பாட்டனாருக்கு 1/2 பாகம் உள்ளது என்று முதல் நிலை தீர்ப்பானது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கானது இறுதி நிலை தீர்வுக்காக அதிகார வரம்பின் காரணமாக திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண்.472/2000 ஆக தாக்கல் செய்யப்பட்டது என்றால் வழக்கு நடந்தது தெரியும். அதிலுள்ள விபரங்கள் தெரியாது. எனது பாட்டனார் வாதிக்கு உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனது பாட்டனார் இறந்த பிறகு தான் விபரம் தெரியும். அந்த உயிலின்படி குஞ்சியாம் பிள்ளைக்கு பாகம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. எனது தகப்பனார் முதல் நிலை தீர்ப்பாணையை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து அந்த மேல்முறையீடு தள்ளுபடியான விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இறுதிநிலை தீர்ப்பாணையை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து அந்த மேல்முறையீடு 07.11.2017 தள்ளுபடியான விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த மேல்முறையீடு எண்.SA.824/2017 என்றால் சரிதான். இந்த வழக்கில் அந்த மேல்முறையீடில் தள்ளுபடியான தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்

இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி வழக்கு விபரங்களை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை 11.12.2023 ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு நிலுவையில் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மேல்முறையீடு நிலுவையில் உள்ளதாக தவறாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்த போது தள்ளுபடி செய்த விபரம் தெரியாது. கடந்த 2017-2018 வருடங்களில் எங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்தேன் என்றால் காரைக்காலில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். இறுதி நிலை தீர்ப்பாணை அனுசரித்து நிறைவேற்று மனு எண்.127/2015 வாதி தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இறுதிநிலை தீர்ப்பாணையின் படி 14.12.2017, 28.03.2018 ஆகிய தேதிகளில் போலீசார் பாதுகாப்புடன் கிராம நிர்வாக அலுவலர், தாலுக்கா சர்வேயர் முன்னிலையில் நீதிமன்ற அமினாக்கள் வாதிக்கு அனுபவம் எடுத்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இடத்தினை அளவீடு மட்டும் செய்து சென்றார்கள். அனுபவம் என்னிடம் தான் உள்ளது. நான் மேற்படி நாட்களில் வழக்கு சொத்தின் அனுபவத்தை வாதிக்கு கொடுத்த போது நான் காரைக்காலில் பணி செய்து கொண்டிருந்ததால் அந்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வாதிக்கு நீதிமன்ற அமினாக்கள் மூலம் அனுபவம் கொடுத்த விபரம் எனது பெற்றோர்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனது பெற்றோர்கள் நிறைவேற்று மனுவில் சொத்தை வாதிக்கு வசம் கொடுத்த போது எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ 3 ஆவணங்களின் படி குஞ்சியாம்பிள்ளைக்கு சேர வேண்டிய பாகம் வாதிக்கு உரிமையுடையது என்றால் சரியல்ல. அந்த வசம் எடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4, 5, 8 ஆவணத்தின் படி தாவா சொத்து வசம் எடுத்து வாதியின் பெயரில் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு வழங்கப்பட்ட 1/2 பாகத்தின் படி எந்தெந்த சர்வே எண் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ஆவணம் எனது தகப்பனார் எனக்கு எழுதி வைத்த செட்டிமெண்ட் ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதிக்கு பாகவீதமாக வழங்கப்பட்ட சர்வே எண் மற்றும் விஸ்தீரணங்கள் வழக்குரையில்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானது என்றாலும் எனது தகப்பானருக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மட்டுமே செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கப்பட முடியும் என்றாலும், வாதிக்கு சொந்தமான தாவா சொத்துக்களையும் சேர்த்து தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததால் அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. எனது தகப்பனாருக்கு சொந்தமான சொத்துக்களை குறிப்பிடும் மூல ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணம் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் SA.824/2017 இரண்டாவது மேல்முறையீடு நிலுவையில் இருந்த போது மோசடியாக எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வாதி நீதிமன்றம் மூலமாக கிடைத்த சொத்தினை வாதி அனுபவிக்க விடாமல் கெட்ட எண்ணத்துடன் மோசடி ஆவணம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவு எனது தகப்பனாருக்கு தெரியும் என்பதால் இந்த வழக்கிற்கு சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு சொந்தமான தாவா சொத்துக்களில் எனது பெயரும் கூட்டு பட்டாவாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கூட்டுப்பட்டா என்பது வா.சா.ஆ.6 ன் அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி எனது பெயரில் தனி பட்டா உள்ளது என்று காட்டும் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணம் நகலைத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கோவிலுக்கு இனாம் எழுதி வைக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள சர்வே எண் என்னவென்றால் புல எண்.35/4B ஆகும். மேற்படி புல எண்.35/4B ஆனது வாதிக்கு சொந்தமானது என்றாலும் வழக்கிற்கு சம்மந்தமில்லாதது என்றாலும் சரியல்ல. புல எண்.35/4B சொத்து எனக்கு சொந்தமானது என்று காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் என் பெயரில் உள்ளதால் தான் எழுதி வைத்தேன். வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி இந்த பி.வா.சா.ஆ.1 ஆவணமானது எழுதி வைக்கப்பட்டது என்றால் சரிதான். தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் என்னுடைய தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது இல்லை என்பதால் பி.வா.சா.ஆ.1 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதியை மோசடி செய்யும் நோக்கத்தோடு இந்த பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுதி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.7 முதல் 16ன் ஆவணங்கள் நீதிமன்றம் வாதிக்கு இறுதி நிலை தீரப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதால் வாதியின் சட்டப்படியான உரிமையும் அனுபவத்தையும் கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வாதிக்கு சொந்தமாக சொத்துக்களை சேர்த்து எனது தகப்பனார் எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் அந்த ஆவணத்தின் 3ம் பிரதிவாதி அலுவலகத்திலிருந்து நீக்கரவு செய்யப்பட்ட வேண்டும் என்றாலும் சரியல்ல. வாதியின் அனுபவத்தை தொந்தரவு செய்து வருவதால் செலவுத்தொகையுடன் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.06 13:26:19 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal